RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s621

OPEN ACCESS

# எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் சுட்டும் பழந்தமிழரின் பண்பாடு

**ம. சித்ராகண்ணு** [அ, *]

[அ] தமிழ்த்துறை, கலை மற்றும் அறிவியல் புலம், பாரத் உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சேலையூர், சென்னை-600126, தமிழ்நாடு, இந்தியா.

# The Culture of Ancient Tamils as Shown in 'Etthuthogai' (Eight Anthologies) and 'Pathinenkeelkanakku' (18 Short Classics)

**M. Chitra Kannu** [a, *]

[a] Department of Tamil, School of Arts and Science, Bharath Institute of Higher Education and Research, Selaiyur, Chennai-600126, Tamil Nadu, India

* Corresponding Author: drchitrakannu77@gmail.com

Received: 11-10-2021
Revised: 29-04-2022
Accepted: 09-05-2022
Published: 17-07-2022

Check for updates

## ABSTRACT

The development of human knowledge has undergone various evolutions according to the changes of time. From the day man began to think, his intellectual development began to function. A man went to different places in search of food and clothing, and when he stayed in one place, he came into contact with many people there and formed an ethnic group. Thus, human life became social. When man interacts with others and shares in their joys and sorrows and gives them comfort and relief, the mind-dependent behaviours emerge as traits. Traits regulate habits. If a man's actions embody the good qualities he has learned and the virtues taught by tradition become established, they are followed by others. Later, these practises are followed by many and blossom into culture. Culture refers to a person's unique characteristics, morals, behaviors, feelings based on beliefs, values, etc. found in life. Every culture has defined rules of conduct and plays a major role in determining the basic lifestyle of the people belonging to that culture. Culture is what the individual gives to society and what society conveys to the individual. There is no respectable life without character. Without such a culture, the movement of the world would not be better. Good manners are based on the virtues of love, purity, commonality, friendship, virtue, compassion, perspective, gratitude, altruism, tolerance, and neutrality. This article explores these qualities of ancient Tamils in 'etthuthogai' (Eight Anthologies) and 'Pathinenkeelkanakku' (18 short classics).

**Keywords:** Eight Anthologies, Pathinenkilkanakku Noolgal, Money, Character, Culture, Morality, Chastity, Dignity

## முன்னுரை

சமுதாய விலங்காகிய மனிதன் பிற மனிதர்களோடு கலந்து வாழும்போது தன்னலத்தை ஓரளவு புறக்கணித்துப் பொது நலத்தைப் பேண வேண்டியவனாகிறான். பிறரை நல்வழிப்படுத்தி, அரவணைத்துச் செல்கின்ற அனைத்து குணநலன்களும், மனிதன் பிறரோடு கொள்ளும் உறவிற்கு அடிப்படைகளாக அமைகின்றன. இவ்வுறவு தன்னுடைய சிறு சமூக எல்லைக் கோட்டைக் கடந்து செல்கிறது. அஃது உலக உறவாக வளர்கின்றது. பண்பாடு என்பது உலக மக்கள் அனைவருக்கும் உரிய சொல்லாகவும்,

இவ்வுலகில் வாழும் ஒவ்வொரு இனத்தவரையும் இனங்காண உதவுவதோடு, அச்சமுதாயத்தின் எண்ணங்கள், குறியீடுகள், நடத்தைகள், செயல்பாடுகள் ஆகியவற்றின் ஒட்டுமொத்த அமைப்பாகவும் விளங்குகின்றது. நமது மூதாதையார்களும் வாழ்வு பண்பட, மேம்பட, சிறக்க பல பண்பாட்டு விழுமியங்களை விட்டுச் சென்றுள்ளனர் (Thenmozhi, 2021). அவை வாழ்வின் பயன் கருதி உருவாக்கப்பட்டவை. தீயனவற்றிலிருந்து பாதுகாப்பதையும் நன்மைகள் விளைவிப்பதையும் நோக்கமாகக் கொண்டவை. அப்பண்பாடுகளைப் பற்றி அறிந்து கொள்ள உறுதுணையாய் அமைவது நமது இலக்கியங்களாகும். தொன்மை சான்ற தமிழர்களின் பண்பாட்டை எட்டுத்தொகை, கீழ்க்கணக்கு நூல்கள் மூலம் ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

## பண்பாடு - விளக்கம்

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, கீழ்க்கணக்கு, காப்பிய, பக்தி கால இலக்கியங்களில் பண்பாடு என்ற சொல் வழக்கு காணப்படவில்லை. பண், பண்பு என்ற சொற்கள் கையாளப்பட்டுள்ளன.

“பண் என்னும் பெயர்ச்சொற்கு மூலமான பண்ணுதல் என்னும் வினைச்சொல்லும், சிறப்பாக ஆளப்பெறும் போது, பல்வேறு வினைகளைத் திருந்தச் செய்தலையும், பல்வேறு பொருள்களைச் செவ்வையாய் அமைத்தலையும் குறிக்கும்” (Devaneya Pavanar, 2006). பண்பு என்பது பெருமை தரத்தக்கது எது என அறிந்து அதன்படி நடத்தலை “பண்பு எனப்படுவது பாடு அறிந்து ஒழுகுதல்” என கற்றறிந்தார் ஏத்தும் கலி குறிப்பிடுகிறது (Govindan, 2002; Puliyur Kesikan, 2010).

“ஒழுங்குகளை ஒருவன் தொடர்ந்து பின்பற்றுவதால் அவனுடைய இயல்பாக அவை மாறிவிடுகின்றன. ஒழுக்கம் இயல்பாகி நாளடைவில் அவனது பண்பாகவே மாறி விடுகிறது” (Santhanam, 1998). அப்பண்பு உடையோர்.

“பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அஃதின்றேல்

மண்புக்கு மாய்வது மன்”

இவ்உலகத்தில் இருப்பதால்தான் உலக இயக்கம் எக்காலத்தும் நிலைத்து நடைபெற்று வருகிறது (Parimelalhagar, 2002).

“பண்பு + பாடு = பண்பாடு, பண் + பாடு = பண்பாடு. என அறிஞர்கள் பண்பாடு என்ற சொல்லின் வரவைக் குறிப்பர்” இதிலிருந்து ‘பண்’, ‘பண்பு’ அடிப்படையிலே பண்பாடு என்ற சொல் தோற்றம் பெற்றது எனலாம் (Aravanan, 1994). “பண்பாடு என்னும் சொல்லை 193 7இல் முதன் முதலில் கையாண்ட பெருமை அறிஞர் இரசிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியாருக்கே உரியது” என்பர் (Rajaratnam, 2007).

“பண்பாடு என்பது பொதுவாக நாகரிகத்தில் அடங்கியதாகும். காலப்போக்கில் மக்கள் தம் வளர்ச்சியின் மனநல ஆக்கமே பண்பாடாகப் பெயர் பெறுகின்றது” (Vaithialingam, 1990). “மக்களை விலங்கினத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டுவது அவர்தம் பண்பாட்டுக் கூறுகளே” (Sundaramoorthy, 1994). இதற்கண் அறிவது பண்பைப் பக்குவப்படுத்துவது பண்பாடாகும்.

## எட்டுத்தொகை நூல்களில் பண்பாடு

இல்வாழ்க்கை என்பது தன்னலம் துறந்து பிறர்நலம் பேணுவது.

“இம்மை மாறி மறுமை யாயினும்

நீயா கியரென் கணவனை

யானா கியர்நின் னெஞ்சுநேர் பவளே”

இப்பிறவியில் மட்டுமின்றி எழுமையும் அவனே கணவனாதல் வேண்டும் என வேண்டுவது, தலைவனுக்கு மனதிற்கேற்றவளாகவும் விரும்பப்படுபவளாகவும் தலைவி இருக்க விரும்புகிறாள்

(Somasundranaar, 1962). அன்பென்னும் சங்கிலியால் பிணைக்கும் இந்த இல்லறப் பண்பாடு சிறந்து விளங்கியமையால், குடும்பம் என்ற அமைப்பு வாழையடி வாழையடியாகச் சிறப்பைப் பெறுகிறது. இதனால்தான் "இல்லறமல்லது நல்லறமில்லை" என்கிறார் (Srinivasan, 2005).

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

என இவ்வுலகமே வியந்து நோக்கத்தக்க உலகப் பொதுமைப் பண்பாட்டோடு, நாகரிகத்தின் உச்சத்தைப் பெற்றவர்களாகவும் தமிழர்கள் வாழ்ந்தது தெளிவாகிறது (Swaminatha Iyer, 2014). மேலும்,

"தோகைக் காவின் துளுநாட்டு அன்ன,

வறுங் கை வம்பலர்த் தாங்கும் பண்பின்

செறிந்த சேரிச் செம்மல் மூதூர்" (Jeyabal, 2004)

கையிற் பொருளின்றி வரும் முன்பு அறியாதப் புதியோரைக் காக்கும் பண்பினை அறிந்தவர்களாக இருந்ததையும்,

"ஈ என இரத்தல் இழிந்தன்று அதன் எதிர்

ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று

கொள் எனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதன் எதிர்

கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று"

தன்னிடம் பொருள் வேண்டி இரவலர் வாராத நாட்கள் இருக்கக்கூடாது எனப் பிறர்க்குக் கொடுத்து வாழும் உயர்ப்பண்போடு வாழ்ந்ததையும் காண முடிகிறது (Swaminatha Iyer, 2014).

"முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்

நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்"

முன்னதாக அமர்ந்து நட்புடையாளர் கொடுத்ததனால், மிக்க நாகரிகத்தை உடையவர்கள், அவர்கள் தந்தது நஞ்சாகவே இருப்பினும் உண்பார்கள். "நட்பு என்பது பிறிரியல்பை அறிந்து நடக்கும் நற்குணம்" என்ற பொருளுக்கேற்ப, தமிழன் நாகரிக பண்பாட்டோடு வாழ்ந்ததை உணர்த்துகிறது (Narayanasamy Iyer, 1867).

"அகன்பெருஞ் சிறப்பின் தந்தை பெயரன்"

மகனுக்குத் தந்தை, தன் தந்தையின் பெயரை வைத்தல் அக்கால பண்பாடாக இருந்தது (Somasundranaar, 1962). அதனாலயே 'தந்தை பெயரன்' என பேரனைக் குறித்தனர். பேரன் என்ற சொல் பெயரன் என்னும் சொல்லிலிருந்து மருவியது.

"தையால்! தம்பலம் தின்றயோ"

எந்த ஒரு மங்கல நிகழ்ச்சியிலும் வெற்றிலை, பாக்குடன் தாம்பூலம் கொடுப்பது சிறந்த பண்பாகவும், இது இன்றளவும் தமிழர்தம் பண்பாட்டுக் குறியீடாகவும் பதிந்துள்ளது (Subramanian, 2010).

"ஒடுங்காத் தெவ்வ ரூக்கறக் கடைஇப்

புறக்கொடை யெறியார்நின் மறப்படை கொள்ளுநர்

ஒடுங்காத் தெவ்வர் ஊக்குஅறக் கடைஇ

புறக்கொடை எறியார் நின் மறப்படை கொள்ளுநர்"

போரில் புறமுதுகில் அம்பு பட்டு வீழ்ந்து போவது, புறமுதுகிட்டு ஓடுவது அவமானம் எனக் கருதினர் (Santhanam, 1998). அதனால் எதிரி நாட்டு படைவீரர்கள் புறமுதுகிட்டு ஓடும் போது, முதுகில் படைகளைச் செலுத்தமாட்டார்கள். இது தமிழனின் அறப்போர் பண்பாடு ஆகும். உயிரைவிட மானம் பெரியது என்ற விழுமியத்தோடு வாழ்ந்தவர்கள் நமது மறத்தமிழர்கள்.

## பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் பண்பாடு

விருந்தோம்பல் என்பது மனித குலத்திற்கே உரிய உயரிய பண்பாகும். வேறு எந்த உயிரினத்திற்கும் இல்லாத சிறப்பு வாய்ந்ததாகும். பழந்தமிழரின் பண்பாட்டு அறங்களுள் விருந்தோம்பல் பண்பு தலைச் சிறந்ததாக இருந்தது (Thenmozhi, 2020). சங்ககாலம் முதல் இன்றைய காலம் வரை விருந்தோம்பலை நாம் பேணிக் கொண்டிருக்கிறோம். தமிழ்ப் பண்பாடுகளில் வந்தவர்களை வரவேற்று உபசரிப்பது சிறந்த கலை. தம்மிடம் புதிதாய் வந்த விருந்தினரைப் உபசரிப்பதே விருந்து எனப்படுகிறது.

“விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா

மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று”

விருந்தினர்களை வெளியில் இருக்கச் செய்து தான் மட்டும் வீட்டின் உள்ளே உண்ணுதல் சாவாமைக்கு மருந்தாகிய அமிர்தமாக இருந்தாலும் வேண்டப்படுவதில்லை என்பதிலிருந்து விருந்தோம்பலின் பண்பை அறியலாம் (Parimelalhagar, 2002).

ஒரு மனிதன் தன்னை தாழ்த்திக் கொள்வதும் உயர்த்திக் கொள்வதும் அவன் செயலைப் பொறுத்தது. அச்செயலை இயக்கச் செய்வது அவரவருடைய மனமே. மனத் தூய்மை ஒருவனைச் சிறந்த பண்பாளனாக்கும் என்பதை,

“கடல்சார்ந்தும் இன்னீர் பிறக்கும், மலைசார்ந்தும்

உப்புண்டு உவரி பிறத்தலால் தத்தம்

இனத்தனையர் அல்லர் எறிகடல்தண் சேர்ப்ப!

மனத்தனையர் மக்கள்என் பார்”

உலகில் எவ்விடத்திலும் நீர் கிடைக்கும், அந்நீரானது உவர்நீராகவும், இனிமையான நீராகவும் இருக்கலாம். அதேபோல் எவ்விடத்திலும் மாந்தர் தோன்றலாம். அவர்களில் மனத்தின் மாண்புடையவரே மக்கள் என்ற சிறப்பைப் பெறுவர். மனப்பக்குவத்தை மையமாகக் கொண்டுதான் மக்களின் பண்பாடு வெளிப்படும் (Gowmareeswari, 2010). மேலும்,

“பிறர்மறை யின்கண் செவிடாய்த் திறனறிந்து

ஏதிலார் இல்கண் குருடனாய்த் தீய

புறங்கூற்றின் மூங்கையாய் நிற்பானேல் யாதும்

அறங்கூற வேண்டா அவற்கு”

அயலாருடைய மறைபொருள்களைக் கேட்பதில் செவிடனாய், அயலான் மனைவியைத் தீயக் கருத்துடன் பார்க்கும்பொழுது கண்ணிரண்டும் அற்ற குருடனாய், பொல்லாங்கு செய்யும் புறங்கூறலில் ஊமையாய், இத்தகைய ஒழுக்கமுடையவனே பண்பாடு வாய்ந்தவன் என மனித குலம் முழுமைக்கும் ஏற்புடைய பண்பாட்டை குறிப்பிடுகிறது நாலடியார் (Gowmareeswari, 2010).

“நன்றி யறிதல் பொறையுடைமை இன்சொலோ

டின்னாத எவ்வுயிர்க்குஞ் செய்யாமை கல்வியோ

டொப்புர வாற்ற வறிதல் அறிவுடைமை

நல்லினத் தாரோடு நட்டல் இவையெட்டும்” (Gowmareeswari, 2010)

பிறர் செய்த உதவியை மறக்காமலும், பொறுமையும், இனிமையான சொல்லும், இன்னாதன செய்யாமையும், கல்வியும், சான்றோர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டதை அறிதலும், அறிவுடைமையும், நல்லினத்தாரோடு நட்புறவு கொள்வதும் என இந்த எட்டும் ஒவ்வொருவரும் வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டிய பண்புகளாக பட்டியலிடுகிறது ஆசாரக்கோவை.

"........................ நிரம்பிடும்பை

பல்பெண்டிர் ஆளன் அறியும்"

வறுமைத் துன்பத்தைப் பல பெண்களை மணந்தவனே அறிவான் என்பதிலிருந்து, இல்வாழ்க்கையில் ஒருவனுக்கு ஒருத்தி என்று வாழ்வதே அறம் என்ற உயரிய பண்பாட்டை வெளிப்படுத்துகிறது (Santhanam, 1998). இதையே, ஒருவனுக்கு ஒருத்தி என்று வாழ்வது தான் காதலின் இன்பம் என்கிறார் பாரதியார்.

"கோடா மொழிவனப்புக் கோற்கதுவே"

"பற்றிலராய்ப் பல்லுயிர்க்கும் பாத்துற்றுப் பாங்கறிதல்"

நடுநிலைமை எனும் பண்பை ஒரு தலைவனுக்கு நற்பெயரை மக்களிடத்தில் ஏற்படுத்தும் (Santhanam, 1998). பற்று இல்லாதவனாய், பற்று கொண்ட மக்களின் பற்றைப் பகிர்ந்து கொண்டு வாழ்தலே சிறந்த பண்புடையான். ஒரு தலைவன் தோற்றம் கொள்கை செயல்பாடு என மற்றவர்களோடு சிறந்திருந்தாலும் நடுநிலைமை இல்லையெனில் மக்கள் ஏற்க மாட்டார்கள் இந்த நடுநிலைமை எனும் பண்புதான் ஒரு தலைவனுக்கு முடிவில்லா ஆளுமைப் பண்பைத் தருகிறது என்பது தெளிவு.

கோபமும், பொறுமையின்மையும் புரிந்துணர்வின் எதிரிகள் என்பார் நம் தேசத் தந்தை.

"கறுத்தாற்றித் தம்மைக் கடிய செய்தாரைப்

பொறுத்தாற்றிச் சேறல் புகழால் ஒறுத்தாற்றின்

வானோங்கு மால்வரை வெற்ப பயனின்றே

தானோன் றிடவரும் சால்பு"

சினம் கொண்டு கொடுமை செய்தவரை பொறுத்து, அவருக்கு நன்மை செய்து ஒழுகுதலே புகழ் தருவதாகும் (Santhanam, 1998). தாமும் பதிலுக்குக் கோபித்துத் தீமை செய்வதால் பயனில்லை. தாம் பொறுத்துக் கொள்ளுதலினாலே வருவது தான் சால்பு என்னும் சிறந்த பண்பாகும்.

"வருக்கை வளமலையுள் மாதரும் யானும்

இருக்கை இதண்மேலே மாகப் - பருக்கைக்

கடாஅமால் யானை கடிந்தானை அல்லால்

தொடாஅவால் என்தோழி தோள்"

மதம் பிடித்த யானை எங்களை நோக்கி சினத்துடன் ஒடி வந்ததை பார்த்து வழிப்போக்கன் ஒருவன் காப்பாற்றினான் (Santhanam, 1998). அவனையே என் தலைவியின் தோள்கள் தழுவிக் கொள்ளும். எங்கள் உயிரைக் காப்பாற்றிய அவனுடைய நன்றியை எம் தலைவி மறக்கமாட்டாள். நன்றி மறத்தல் தமிழர் பண்பாடன்று என்ற தமிழர் நெறியை உரைக்கிறது இப்பாடல்.

## முடிவுரை

பழந்தமிழனின் பண்பாட்டு நெறியினை அவர்தம் வாழ்வியலின் வாயிலாக நம்மால் அறிந்து கொள்ளமுடிகிறது. அன்பு, தூய்மை, பொதுமை, நட்பு, அறம், இரக்கம், கண்ணோட்டம், நன்றி அறிதல், பிறர்நலம் பேணுவது, இரத்தல், நடுநிலைமை போன்ற நற்பண்புகளை அனைவராலும் பகிர்ந்து, செயல்படுத்தக்கூடிய தன்மை உடையது என்ற பொதுமைக் கருத்தையும் உணர்த்துகிறது. பண்புடையவராக வாழ்தலைத் தமிழ்ச் சமுதாயம் மிகவும் போற்றியுள்ளது. பண்பு என்பது ஒருவருடைய செயலிருந்து கிடைக்கப்பெறும் நல்முடிபு. அம்முடிபு பலரால் ஏற்றுக்கொள்ளப்படும் பொழுது மனிதனுக்கு தனித்தன்மையை தருகின்றது. அது சமுதாயம் போற்றும் உயர்ந்த

மனிதனாக்குகின்றது. பண்பாளானாக பறைசாற்றுகிறது. அதைச் சமுதாயம் முன்னெடுத்துச் செல்லும்பொழுது பண்பாடாக நிலைபெறுகிறது என்பது தெளிவாகிறது. பழந்தமிழனின் வாழ்வியலை புரிந்து கொள்ளவும், பண்பாட்டை உணர்ந்து கொள்ளவும் இலக்கியம் அடிப்படையானது என்பதைக் இக்கட்டுரை தெளிவுபடுத்துகிறது.

## References


Aravanan, K.P., (1994) Tamilar Mel Nikalantha panpattup pataiyetupukal, Tamilkottam, Chennai, India.

Devaneya Pavanar, (2017) Pandai Tamil Nagarikamum Panpaadum, Gowra Pathippaga Kuzhumam, Chennai, India.

Govindan, T., (2002) Anbodu Punarndha Ainthinai Neithal, Veman Pathippagam, Chennai, India.

Gowmareeswari, S., (2010) Naladiyar Thelivurai, Saradha Pathippagam, Chennai, India.

Jeyabal, R., (2004) Agananooru, New Century Book House, Chennai, India.

Jeyabharathi, T., (2021) The Theory of the Major Theological Principles of Eight Anthologies. International Research Journal of Tamil, 3(S-2), 218-221. https://doi.org/10.34256/irjt21s241

Narayanasamy Iyer, A., (1867) Natrinai, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Tirunelveli, India.

Parimelalhagar, (2002) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

Puliyur Kesikan, (2010) Kalithogai, Sri Senbaga Pathippakam, Chennai, India.

Rajaratnam, S., (2007) Panpadu Verum Viluthum, Viveka Press, Canada.

Santhanam, M., (1998) Tamizhar Panpaadu, Diwakar Press, Karumathur, India.

Somasundranaar, P.V., (1962) Kurunthogai, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Tirunelveli, India.

Srinivasan, A., (2005), Bharathiyar Urainadai Mozhi, Karmayogi Pathippagam, Chennai, India.

Subramanian, S.V., (2010) Kalittokai, Manivasagar Pathippagam, Coimbatore, India.

Sundaramoorthy, E., (1994) Ilakkiyamum Panpadum, New Century Book House, Chennai, India.

Swaminatha Iyer, U.Ve., (2014) Purananooru Moolam Uraiyum, U, V, SA., Library, Chennai, India.

Thenmozhi K., (2020) A Review of the Aim and Trend of Hospitality in Sangam Literature, Indian Journal of Tamil, 1(3) 8-13. https://doi.org/10.34256/ijot2032

Thenmozhi, S., (2021) Sangam Landscape and its Theological Soctrines, Indian Journal of Multilingual Research and Development, 2(2), 31-35. https://doi.org/10.34256/ijmrd2126

Vaithialingam, S., (1990) Tamilar panpadu varalaru, Arul Pathippagam, Chennai, India.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License